Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8088329 C

02/2026/AC/VPM

1. District : விழுப்புரம் PS காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: முத.அ. எண் Date: 27.03.2026 நாள்

2. (i) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 120B, 167, 409, 468, 471

(ii) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c)

(iii) Act சட்டம்: PC Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 01.06.2014 நாள் முதல் Date to : 30.01.2018 மற்றும் 29.07.2018 நாள் வரை 30.07.2018

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.05.2023 Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I 27.03.2026 Time : நேரம் 18.00 HRS

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 KM வடக்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி அரசு அதிதீராவிடர் நல மாணவர் விடுதி, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. திராவிடமணி குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : முத்து தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண்-27, மாரியம்மன் கோவில் தெரு, பெரிய கொளனி, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. சரண்தேஜ், வயது 41, தி/பை எஸ்ஐ, பிளானர் விடுதி காவிபாளர், அரசு அதிதிராவிடர் நல மாணவர் விடுதி, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்.
2. திரு. வேல்முருகன், வயது 55, தி/பை நடராஜன், பிளானர் தனி வட்டாட்சியர், அரசு அதிதிராவிடர் நலன், விழுப்புரம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தினமலர்ல உதிதராவிட நல மாணவர் விடுதி காவலர்கள் DE 39/2023/ADW/VPM பதிவு செய்தி வெளியிட்டதால் தாமதம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விபரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முகாந்திரம் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்டு சட்டு பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் சி.சி.இரண்டாம் பதவி நிலை தலைமைக் காவலரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு இரு.த.க பிரிவு, சாண்டினிதீர் காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதல் தகவலாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
புகாரளித்தவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகை பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலின் ஒப்பம்

27.03.2026

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

27.03.2026

Name பெயர் க. பாண்டியராஜன்

Rank நிலை சார்பு ஆய்வாளர் No. எண் .....

இரு.த.க பிரிவு
சாண்டினிதீர்

Cr.No.02/2026/AC/VPM வழக்கின் தனிதாள் தொடர்ச்சி

கு.அ-1:

திரு.S.செந்தில்,வயது 41,
த/பெ.செல்வம்,
முன்னாள் விடுதி காப்பாளர்,
அரசு ஆதிதிராவிடர் நலமாணவர் விடுதி, விக்கிரவாண்டி,
விழுப்புரம் மாவட்டம்.

கு.அ-2:

திரு.ந.வேல்முருகன்,வயது 55,
த/பெ.நடராஜன்,
முன்னாள் தனி வட்டாட்சியர்,
அரசு ஆதிதிராவிடர் நலன்,
விழுப்புரம் மாவட்டம்.

திரு.M.ராபர்டிங்கம், த/பெ.முத்து, எண்.27, மாரியம்மன் கோவில் தெரு, பெரியகோலனி, விக்கிரவாண்டி, விழுப்புரம் & மாவட்டம் என்பவரின் புகார் மனு மீது சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் அனுப்பிய குறிப்பாணை எண் PE.39/2023/ADW/VPM நாள்: 24.05.2023-ன் படி விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் PE.39/2023/ADW/VPM நாள்: 06.06.2023-ன் படி முதல் நிலை விசாரணை பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் விபரங்கள் கண்டறியப்பட்டுள்ளது. மார்ஜினில் கண்டுள்ள இரண்டு குற்ற அலுவலர்களும் ஊழல் தடுப்பு சட்டம் 1988, சட்டப்பிரிவு 2(C)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

*****

குற்ற அலுவலர்-1 திரு.செந்தில் என்பவர் கடந்த 01.06.2014 முதல் 30.07.2018 வரை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள விக்கிரவாண்டி அரசு ஆதிதிராவிடர் நலமாணவர் விடுதியில் விடுதி காப்பாளராக பணிபுரிந்தபோது, விழுப்புரம் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியராக பணிபுரிந்த கு.அ-2 திரு.வேல்முருகன் என்பவருடன் கூட்டு சேர்ந்து சுயலாப உள்நோக்கத்தோடு, மேற்படி விடுதியில் அரசால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 55 மாணவர்களில் 10 மாணவர்களே தங்கி படித்து வந்த நிலையில், 55 மாணவர்கள் தங்கி படித்ததாகவும், 55 மாணவர்களுக்கும் தினமும் மூன்று வேளை உணவு வழங்கப்பட்டதாகவும், விடுதியின் வருகைப்பதிவேடு, உணவு பொருட்கள் வரவு செலவு பதிவேடு ஆகியவற்றில் பொய்யாக குறிப்புகள் எழுதி, விடுதிகளுக்கு உணவு பொருட்கள் வாங்கியது போன்று போலியான ரசீதுகள் தயாரித்து அவற்றை உண்மையானது என காண்பித்து உணவுக்கட்டண கேட்பு பட்டியல்களுடன் இணைத்து அரசுக்கு அனுப்பியதன் மூலம் குற்றமுறு நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டு அரசு பணத்தை கையாடல் செய்துள்ளார்கள்.

மேற்படி விடுதிக்காக, விழுப்புரம் ஆதிதிராவிடர் நல அலுவலர் அலுவலகத்திற்கு (ADWO) அனுப்பிய உணவு கட்டண கேட்புப் பட்டியல்களின் அலுவலக நகல்கள் பார்வையிட்டு விசாரணை செய்ததில் விடுதிக்கு தேவையான உணவு பொருட்கள் அனைத்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும், தனிநபரிடமிருந்தும், கொள்முதல் செய்யப்பட்டும், அனைத்து ரசீதுகளுமே அரசு பதிவெண் பெற்ற நிறுவனங்களில் வாங்கப்படாமல் உள்ளது என்று தெரியவருகிறது.

அந்த ரசீதுகளை பார்வையிட்டதில் சில ரசீதுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி நடப்புமாதம் இல்லாமல் அடுத்த மாதத்திற்குறிய தேதிகளில் உள்ளது போன்றும், சில ரசீதுகளில் தொகை பெற்றதற்கான ஒப்புதல் கையொப்பம் இல்லாமலும், சில ரசீதுகள் ஏற்கனவே இறந்துபோன நபரின் கையொப்பம் பெறப்பட்டது போன்றும், பல ரசீதுகளில் தேதி குறிப்பிடாமலும், பல ரசீதுகளில் வாங்கப்பட்ட பொருட்களின் பெயர் விபரம் குறித்து எழுதப்பட்டுள்ள கையெழுத்தும் உணவுக்கட்டண கேட்பு பட்டியல்களில் உள்ள கையெழுத்தும் ஒரே மாதிரியாகவும் இருந்ததும், மேற்படி ரசீதுகளை சம்மந்தப்பட்ட கடை உரிமையாளர்களிடம், பயன்படுத்தப்படாத மாதிரி ரசீதுகளை பெற்று ஒப்பிட்டு பார்க்க, அவையனைத்தும் விடுதிகாப்பாளர் திரு.செந்தில் என்பவர் விடுதிகளுக்கு உணவு பொருட்கள் வாங்கியது போன்று தயாரிக்கப்பட்ட போலியான ரசீதுகள் என்பதும் தெரியவருகிறது. மேலும் சம்மந்தப்பட்ட கடை உரிமயாளர்களிடம் ஆவணங்களை காட்டி விசாரணை செய்ததில் அவை சம்மந்தப்பட்ட கடைகளின் ரசீதுகள் இல்லை என்றும் போலியானது என்றும் தெரியவருகிறது.

குற்ற அலுவலர்-2 திரு.வேல்முருகன், கடந்த 01.06.2014 முதல் 30.01.2018 வரை விழுப்புரம் மாவட்டம், ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியராக பணிபுரிந்தபோது, கு.அ-1 விடுதி காப்பாளர் திரு.செந்தில் என்பவருடன் கூட்டுசேர்ந்து சுயலாப உள்நோக்கத்தோடு, விக்கிரவாண்டி அரசு ஆதி திராவிடர் நலமாணவர் விடுதியை மாதம் ஒருமுறை களஆய்வு மேற்கொள்ளாமலும், விடுதியின் பதிவேடுகளை சரியாக பார்வையிடாமலும், மேற்படி விடுதியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை உறுதிபடுத்தாமலும், விடுதி காப்பாளர் திரு.செந்தில் என்பவரால் அனுப்பப்பட்ட உணவுக்கட்டண கேட்புப்பட்டியல்கள் போலியான இரசீதுகள் கொண்டவை என்று தெரிந்தும் முறைகேடான முறையில் அரசு தொகை விடுவிப்பதற்கான செயல்முறை ஆணைகள் தயார் செய்து விழுப்புரம் சார்நிலை கருவூலத்திற்கு அனுப்பி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்தில் இருந்து ஒதுக்கப்படும் தொகையிலிருந்து ECS மூலம் தொகையினை விடுவித்து விடுதியின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு அரசு பணம் மொத்தம் ரூபாய்.6,83,577/- அளவிற்கு கையாடல் செய்து அரசிற்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது.

முதல்நிலை விசாரணையின் அடிப்படையில் பொது ஊழியர்களான குற்ற அலுவலர்-1 திரு.செந்தில், மற்றும் குற்ற அலுவலர்-2 திரு.வேல்முருகன் ஆகிய இருவரும் அரசு பணத்தை கையாடல் செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு பொய்கணக்கு எழுதி மற்றும் போலியான ஆவணங்கள் தயார் செய்து, நேர்மையின்றி ஏமாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு, ஒன்று சேர்ந்து கூட்டாக ஒத்த கருத்துடன் ஒத்துழைத்து ஈடுபட்டு அரசு பணத்தை கையாடல் செய்து அரசிற்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது.

ஆகையால் மேற்படி குற்ற அலுவலர்கள் இருவர் மீதும் வழக்கு பதிவு செய்து புலண்விசாரணை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறைகளிடம் அனுமதி செயல்முறை ஆணைகள் பெற்று ஊழல் தடுப்பு இயக்குநரிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் இன்று 27.03.2026-ந்தேதி 18.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2026/AC/VPM-ன்படி குற்ற அலுவலர்-1 திரு.செந்தில் மற்றும் குற்ற அலுவலர்-2 திரு.வேல்முருகன் ஆகியோர் மீது 01.06.2014 முதல் 30.01.2018 வரையிலான

குற்ற நிகழ்வு கலைத்திரு சட்டப்பிரிவுகள் 120 B, 167, 409, 468, 471 IPC and 13(2) r/w 13(1)(c) of Provention of Corruption Act 1988-ன் படியும் மற்றும் குற்ற அறிக்கை-1 செய்தில் கண்டவர் மீது 20.07.2018 முதல் 30.07.2018 வரையிலான குற்ற நிகழ்வு கலைத்திரு சட்டப்பிரிவுகள் 167, 409, 468, 471 IPC and 13(2) r/w 13(1)(a) of Provention of Corruption Act, 1988 as amended by Provention of Corruption (Amendment) Act 2018-ன் படியும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் பிரதியை மாவட்ட முதன்மை மாவட்ட நீதிபதி, விழுப்புரம் அவர்களுக்கும், அதன் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் பணிவுடன் அனுப்பப்படுகிறது.

27.03.2019

காவல் துணை கண்காணிப்பாளர்,
உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.